

**நாமக்கல் - திருச்செங்கோடு விவேகானந்தா கல்லூரி மாணவி காயத்திரி மர்மப் படுகொலை!**

நீதிகேட்டு போராடிய பெண்கள் , குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மீது காவல்துறை காட்டுத்தனமான தடியடி: கை-கால் மண்டை உடைப்பு!

படுகொலையை மறைக்க கல்லூரி நிர்வாகமும், காவல்துறையும் கூட்டுச்சதி!

பஸ்சை போலீசே எரித்துவிட்டு பேரவை தோழர்கள் மீது அடக்குமுறை,பொய்வழக்கு-கைது











**படிக்கும் குழந்தைகளின் உயிர்காக்க வெடித்து கிளம்பட்டும் மக்கள் கிளர்ச்சி!**

# ஆதித்தமிழர் பேரவை

94427 01235, 94866 85642, 97156 54022, 97155 57379

தன்னலமற்றஇளைஞர்கள் நூறுபேரை என்னிடத்தில் தாருங்கள் இந்த நாட்டையே தலைகீழாய் புரட்டிப்போடுகிறேன் என்றும்... காவிஉடை தரித்து, காமவெறியை கட்டுப்படுத்தி காலமெல்லாம் கன்னியர்களை சகோதரிகளாக போற்றி வாழ்ந்துகாட்டிய ஆன்மீகவேங்கை வீரத் துறவி என்று இந்துத்துவவாதிகளால் இன்றுவரை வாய்ஓயாமல் பீற்றிக் கொள்கின்ற

“விவேகானந்தரின்” பெயரில் இயங்கும் நாமக்கல்-திருச்செங்கோடு பொறியியல் கல்லூரியில் தொடரும் மாணவிகளின் மர்மபடுகொலைகளில் முதலில் வெடித்து கிளம்பியது 2-9-2012 அன்று பாலியல் சித்ரவதைக்குள்ளாகி படுகொலை செய்யப்பட்ட காயத்ரியின் கோரப்படு கொலை மட்டுமே.

நாம்தான் படிக்கவில்லை! நமது பிள்ளைகளாவது படிக்கட்டுமே என்று வாயைக்கட்டி, வயிற்றைகட்டி அதுவும் பெண்பிள்ளையென்றால், அடிவயிற்றில் நெருப்பையும் கட்டிக்கொண்டு பிள்ளை களை கல்லூரிக்கு அனுப்பும் பெற்றோர்கள் கல்லூரியை கோயிலாகவும், நிர்வாகத்தை கடவுளாகவும் நினைக்கின்ற இவர்களுக்கு காயத்ரியின் படுகொலை என்பது தலை யில் பேரிடியாக விழுந்துள்ளது.

நாட்டில் எத்தனையோ கட்சிகள் இருந்தும், ஆளுகின்ற முதல்வர் பெண்ணாக இருந்தும்.. ஓட்டுக்கேட்க மட்டுமே சக்கிலியர்களைத்தேடி வருகின்ற இவர்கள். இந்த அநீதியை தட்டிக்கேட்க முன்வராதபோது இதற்கும் ஆதித்தமிழர் பேரவையே போராட வேண்டியிருக்கிறது.

கடந்த 24-9-2012 அன்று ஆதித் தமிழர் பேரவை நீதிக்கேட்டு நாமக்கல் ஆட்சியர் அலுவலகம் முன்பு சனநாயக முறையில் அனுமதிக்கோரி “தொடர்முழக்க போராட்டத்தை’’ முன்னெடுத்தது. பல்லாயிரக்கணக்கில் பெண்களும், குழந்தைகளும், பெரியவர்களும் கலந்து கொண்ட அந்த போராட்டத்திற்கு காவல்துறை திடீரென காரணமின்றி அனுமதி மறுத்தது. **கலைந்து ஓடுங்கள்** என்று காட்டுத்தனமாக தடியடி நடத்தியது. இதில் 20-க்கும் மேற்பட்ட பெண்களும், குழந்தைகளும் 30-க்கும் மேற்பட்ட பெரியவர்களும், இளைஞர்களும் கை,கால்,மண்டை உடைப்பட்டு சிதறி ஓடினர். இதில் பேரவை தோழர்களையும், பெண்களையும் மட்டுமே 350 பேரை கைது செய்து செந்தூர் என்ற திருமண மண்ட பத்திலும், சுப்புலட்சுமி என்ற திருமண மண்டபத்திலும் சிறைபடுத்தியது.

**பேருந்தை எரித்த போலீசும், பேரவையை மக்களிடமிருந்து அன்னியப்படுத்த நடந்த சதியும்**

நீதிகேட்டு கூடிய 3500 மேற்பட்ட மக்களை நண்பகல் 12 மணியிலிருந்து மாலை 3 மணிவரை கண்மூடித்தனமாக தடியடி நடத்திவிட்டு அரசுபஸ்சை காவல் துறையே எரித்து விட்டு, பேரவை தோழர் களை **சமூகவிரோதிகள்**போல் சித்தரித்து மதுரை பொறுப்பாளர்கள் மூன்று பேரையும், நாமக்கல் திருச்செங்கோடு பொறுப்பாளர்கள் ஆறுபேரையும்,

இதுவரை அரசுபஸ்சை எரித்ததாக, கல்லூரிபஸ்சை உடைத்ததாக, போலீசை கொலைமிரட்டல் செய்ததாக மொத்தம் 9 பேரை கைது செய்துவிட்டு இன்னும் பல பொறுப்பாளர்களை பிடிக்க **இரவு-பகலாக அருந்ததியர் பகுதிக்குள் புகுந்து அட்டகாசம் செய்கிறது.**

ஏற்கனவே! தண்டவாளத்தை தகர்த்த தாக விழுப்புரத்திலும், ஊத்துக்குழியிலும், பல நபர்களை தேச பாதுகாப்பு சட்டத்தில் கைதுசெய்து நாடகமாடிய போலீசு கடைசி யில் போலீசுதான் தண்டவாளத்தை தகர்த்ததாக உண்மை ஊருக்கு அம்பலமானது. அதே நாடகத்தைதான் இப்போது நாமக்கல்லிலும் நடத்துகிறது.

**சதிகார டி.எஸ்.பி.யின் சர்வதிகாரமும் சக்கிலிய தலைவர்கள் மீது போடும் பொய்வழக்கும்**

இதில் வேடிக்கை என்னவென்றால் படு கொலையான காயத்ரிக்கு உறவினரான சக்கிலிய சாதியில் பிறந்த டி.எஸ்.பி **அண்ணாமலை** கல்லூரி நிர்வாகத்திற்கு கைக்கூலியாக மாறி பெற்றோர்கள் பணம் கேட்டார்கள் என்றும் பத்திரிக்கையாளர் களும், தொலைக்காட்சியினரும், இயக்க வாதிகளும் பணம் கேட்டதாக புரளியை கிளப்பி பார்த்துவிட்டு மக்கள் கிளர்ச்சி வெடித்தவுடன் பேரவையை ஒடுக்குவதற்கு 9 பேரை கைது செய்து, 13 பேர் மீது பொய் வழக்குப்போட்டு வெறி அடங்காமல் **நிறுவனர் அதியமான், பொதுச்செயலாளர் நாகராசன்,** நாமக்கல் மாவட்ட செயலாளர் தமிழரசன் ஆகியோர் மீது வழக்குபோட்டு வலைவீசி தேடிவருகிறதாம்!

**இந்த சல,சலப்புக்கெல்லாம் அஞ்சிவிடுமா! ஆதித்தமிழர்பேரவை**

நாம் கடந்துவந்த பாதையென்பது கல்லையும், முள்ளையும் காட்டாற்று வெள்ளத்தையும் நீந்திவந்த கற்கால பாதையல்ல!

கணினி யுகத்திலும் கற்கால காட்டுமிராண்டிகளின் மிச்சசொச்சம் சாதிவெறி திமிரோடு, சண்டித்தனம் செய்து வெண்மணி, மேலவளவு, தாமிரபரணி, செகுடந்தாளி என நீளும் ரத்த வெள்ளத்தில் இப்போது மேட்டுப்பாளையம் வீராச்சாமி, விருதுநகர் சுரேசு, திருத்தங்கல் பாண்டித்துரை, தேனி பெருமாள், ராசிபுரம் மாணவி ஜோதி இந்த வரிசையில் அன்பு குழந்தை காயத்ரியும் அடங்கி விட்டாள்.

அரசின் அடக்குமுறையையும், காவல் துறையின் காட்டுத்தனத்தையும், கல்லூரி நிர்வாகத்தின் கற்பழிப்பு கொலைவெறி யையும், காலம் மண்ணிக்காது என்று காத்துகிடப்பதைவிட காளம்மிறங்கி போராட காயத்ரியின் கொலைக்கு நீதி கிடைக்க ஆதித்தமிழர் பேரவையோடு மாணவர்களே, இளைஞர்களே, பெண்களே, வெகுமக்களே மற்றும் சனநாயக சக்திகளே கரம் கோருங்கள்,

**போடப்பட்ட பொய் வழக்குகள் பொடி,பொடியாகட்டும்-அதற்கு நீங்கள் தரும் நன்கொடை துணையாகட்டும்!**

**நிதி தாரீர்...**







# தமிழக அரசே...

- **காயத்ரியின் மர்மப் படுகொலையை கண்டறிய சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு உத்தரவிடு!**
- **கல்லூரி நிர்வாகத்தின் மீது கடும் நடவடிக்கை எடு!**
- **காவல்துறையே அடக்குமுறை பொய்வழக்கை கைவிடு!**
- **சிறைபடுத்தப்பட்ட பேரவை நிர்வாகிகளை நிபந்தனையின்றி உடனே விடுதலை செய்!**